OS.100/2022

நாள். 24.02.2026.

வா.சா. 2 – ராமநாதன் , த/பெ. நாகரெத்தினம்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் பதிவுபெற்ற ஆவண எழுத்தராக எத்தனை வருடங்களாக தொழில் செய்து வருகிறேன் என்றால் 54 வருடங்கள். சொத்து சம்மந்தமான உரிமைமாற்ற ஆவணங்களின் மதிப்பு 100 ரூபாய்க்கு மேல் இருந்தால் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் மூலம்தான் உரிமைமாற்றம் செய்ய இயலும் என்றால் சரிதான். என்னுடைய சாட்சியத்தின்படி வா.சா.ஆ.25 ஆவது ஆவணம் உடன்படிக்கையா அல்லது பாகப்பிரிவினை ஆவணமா என்றால் உடன்படிக்கை ஆவணம். உடன்படிக்கை ஆவணம் என்றால் இவ்வளவு காலத்திற்குள் ஆவணம் பதிவு செய்யப்படவேண்டும் என்ற சரத்து சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணத்தில் அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பக்கம் 4 ல் வருகிற 31.12.2018 க்குள்ளாக பாகம் முறையாக பதிவு செய்து கொள்ளவேண்டியது என்ற சரத்து உள்ளது. மேற்படி வாசகம் சொத்து விவரத்தில் இடைச்செறுகலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக காலநிர்ணயம் சொத்து விவரத்திற்கு மேலாகத்தான் எழுதுவார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணத்தை நான் எழுதுவதற்கு முன்பாக அதில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களின் ஆவணங்களைப் பார்த்துத்தான் எழுதினேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.25 ல் மொத்தம் எத்தனை அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 13 அயிட்டம். அதில் எந்தெந்த அயிட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள், எந்தெந்த சொத்துக்கள் வாதி, பிரதிவாதிகள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் என்னால் முடியும். வா.சா.ஆ.25 ல் ஒரு சொத்து பிரதிவாதியின் தாயார் ஆனந்தவள்ளிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மற்றொரு சொத்து பிரதிவாதியின் தாத்தா சீனிவாசனுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். பிரதிவாதியின் தாயார் ஆனந்தவள்ளி ஆவணத்தின் ஒரு தரப்பினராக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். அதேபோல் வாதி, பிரதிவாதியின் சகோதர, சகோதரிகள் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.25 க்கு முத்திரைத்தாள் எங்கு

வாங்கப்பட்டது என்றால் முத்திரைத்தாள் விற்பனையாளர் ஆர். கோவிந்தராஜன். ஆர்.கோவிந்தராஜன் என்பவர் என் அலுவலகத்தில் உள்ள நபர் என்றால் சரிதான், அவர் முத்திரைத்தாள் விற்பனையாளர். அவர் என் அலுவலகத்தில் வைத்துத்தான் முத்திரைத்தாள் விற்பனை செய்கிறார் என்றால் சரிதான். பேச்சுவார்த்தை நடத்துவதற்கு என்னை யார் கூப்பிட்டது என்றால் இருதரப்பினரும். வா.சா.ஆ–25 எழுதுவதற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பு என்னை கூப்பிட்டார்கள் என்றால் 1 மாதகாலமாகவே இருதரப்பினரும் பேச்சு வார்த்தை என் மூலம் பேசினார்கள். நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நபர்கள் அனைவரும் வா.சா.ஆ.25 எழுதிய அன்று என் அலுவலகத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை, என் வீட்டிற்கு வந்தார்கள். வா.சா.ஆ–25 எழுதப்பட்ட 13.08.2018ம் தேதி என்ன கிழமை என்றால் ஞாபகமில்லை. நான் ஞாயிற்றுகிழமை தவிர்த்து மற்ற நாட்களின் என்னுடைய அலுவலகத்திற்கு சென்றுவிடுவேன் என்றால் சரிதான். மேற்சொன்ன நபர்கள் என் வீட்டிற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் மாலை 06.00 மணிக்கு. எவ்வளவு நேரம் பேச்சுவார்த்தை நீடித்தது என்றால் இரண்டு மணிநேரம். 13.08.2018 அன்றே பேச்சுவார்த்தை முடிந்துவிட்டதா என்றால் ஆமாம், பேச்சுவார்த்தை முடிந்து அன்றே இரவு 08.00 மணிக்குமேல் ஆவணம் எழுதப்பட்டது. வா.சா.ஆ.25 க்கான முத்திரைத்தாள் 08.08.2018ம் தேதி வாங்கப்பட்டது என்றால் சரிதான். ஏற்கனவே அந்த ஆவணம் வாங்கப்பட்டது. 13.08.2018ம் தேதி பேச்சுவார்த்தை சுமூகமாக முடிந்துவிடும என்று தெரிந்தே 08.08.2018ம் தேதி முத்திரைத்தாள் வாங்கப்பட்டதா என்றால் ஏற்கனவே இருதரப்பினரும் ஒரு முச்சாலிகா எழுதவேண்டும் என்று சொன்னதால் வாங்கப்பட்டது. முத்திரைத்தாள் வாதி ரெங்கராஜன் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ–25ல் இணைக்கப்பட்டுள்ள தாள்களில் முதல் 3 பக்கத்தில் கீழே 1, 2 என குறிப்பிடப்பட்டும், 4வது பக்கத்தில் குறியீடு மட்டும் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எழுத்துக்கள் கருப்பு மையினாலும், கையெழுத்துக்கள் நீலநிற மையினாலும் உள்ளது என்றால் சரிதான். தரப்பினர்கள் நேரடியாக கையெழுத்து போட்டால் 1, 2 மற்றும் குறியீடுகள் செய்யமாட்டார்கள் என்றும், எழுதி கையெழுத்து வாங்க அனுப்பி வைக்கும்பட்சத்தில்தான் அவ்வாறு எழுதுவார்கள் என்றால் சரிதான். 4வது பக்கத்தில் சொத்து விவரத்தின் கடைசி வரியில் ஆவண தரப்பினர்கள் கையெழுத்து செய்வதற்கு இடமில்லாத அளவிற்கு சாட்சி என

குறிப்பிட்டு பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த பேப்பரிலேயே முடித்துவிடவேண்டும் என்பதற்காக எழுதப்பட்டது. வா.சா.ஆ.25 ஆவணம் நானும், ரெங்கராஜனும் சேர்ந்து உற்பத்தி செய்தோம் என்றும், அதில் கையெழுத்திட்டுள்ள பிரதிவாதியோ, அவரது தாயாரோ எங்கள் முன்னிலையில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. 31.08.2018 ம் தேதிக்கு பிறகு பத்திரம் எழுதிக்கொள்ள வேண்டும் என சொல்லப்பட்டுள்ள நிபந்தனையின்படி பாகஆவணம் பதிவு செய்ய வேண்டும் என்று நான் உபயதரப்பினர்களை கேட்டேனா என்றால் கேட்டேன். நான் சொன்னதுபோல் ஆவணம் எழுதப்படவில்லை என்றும், நான் கேட்கவில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியபடி பாகப்பத்திரம் பதிவு செய்வதற்காக பத்திர நகல் தயார் செய்யப்பட்டு பதிவு செய்வதற்கு தயாராக இருந்த நிலையில் என சொல்லப்பட்டுள்ளபடி வரைவு பாகஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது தேடிப்பார்க்க வேண்டும். எவ்வளவு மதிப்பிற்கு ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. நான் வரைவு பாக ஆவணம் எழுதவில்லை என்றும், எழுதியதாக வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.